**செய்தி வெளியீடு எண் : 1092** **நாள் : 03.06.2023**

**<u>செய்தி வெளியீடு</u>**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100 ஆவது பிறந்த நாளையொட்டி இன்று (3.6.2023), புதுதில்லி பொதிகை தமிழ்நாடு இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு புதுதில்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி திரு. ஏ.கே.எஸ்.விஜயன் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதனை தொடர்ந்து ஒடிசாவில் நேற்று நடந்த இரயில் விபத்தில் உயிர் இழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு இல்லம் முதன்மை உள்ளுறை ஆணையர் திரு. ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., கூடுதல் உள்ளுறை ஆணையர் திரு. சின்னதுரை, கூடுதல் இயக்குநர் திரு. பொ.முத்தையா, பொது மேலாளர் திரு. தெய்வசிகாமணி, தில்லி தமிழ் சங்க தலைவர் திரு. கே.வி.பெருமாள், பொதுச் செயலாளர் திரு. முகுந்தன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**பின்னர், புதுதில்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி திரு. ஏ.கே.எஸ்.விஜயன் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது.**

நேற்று இரவு ஒடிசாவில் இரயில் கோர விபத்து நடந்துள்ளது. இவ்விபத்தில் சிக்கியவர்களை பாதுகாக்கும் வகையில் தேவையான உதவிகளை செய்வதற்காக புதுதில்லியில் HELP DESK எண். 9289516711 மற்றும் மின்னஞ்சல் முகவரி helpdesk.tnhouse@gmail.com கொடுக்கப்பட்டுள்ளது என கூறினார்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in